# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன்

JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 6 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 4**
**APRIL 2022 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே,

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

இது நம் பிள்ளைகளின் பரீட்சை காலம் கடந்த ஒரு வருடமாக பிள்ளைகள் எவ்வளவு தூரம் முயற்சி எடுத்து படித்து பயிற்சி செய்தார்களோ அதற்கான முடிவு இந்த மாத ரிசல்டில் காணப்படும். இதன் வெற்றியின் அளவை வைத்துதான் அடுத்த உயர் படிப்பு அமையும்.

அதைப்போலவே நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் கடந்த காலத்தில் நாம் வாழ்ந்த **ஆவிக்குறிய ஜீவியத்தை** எப்படி கழித்தோம் என்பதை பரிசோதிக்க ஒரு **பரீட்சை உண்டு.** அந்த பரீட்சைக்கு ஒரு முடிவும் (Result) விளைவும் உண்டு. இந்த பரீட்சையும் ரிசல்ட்டும் எதற்காக? **கிறிஸ்து** தம் மணைவாட்டியான சபையை கூட்டிக்கொண்டு போவதற்காக **இரண்டாம் முறை** வரப்போகிறார். அப்போது நாம் வாழ்ந்த வாழ்கையின் வருடங்களை கணக்கிட்டு அதின் முடிவில் வைக்கப்பட்ட பரீட்சையில் **அதிகமார்க், குறைந்த மார்க்** எடுத்தவர் யார் என்ற அடிப்படையில் தேர்வு (ரிசல்ட்) கணக்கிடப்படாது. ஆனால் **தேரினவன்** யார் ? **தோற்றவன்** யார்?

**APRIL - 2022**

என்பது மட்டுமே கவனித்து **இரண்டாம் வருகையில்** அவர்களைப் பிரித்து **மணவாளனுடன் சேர்த்து** வைக்கப்படுவார்கள்.

அதில் **பாஸ்ஸாக** மனிதனுடைய எந்த குறுக்குவழியும், **சிபாரிசும்,** லஞ்சமும் எடுபடாது. **ஆசீர்வாத தட்டை** பல லட்சம் ரூபாய் கொடுத்து **ஒவ்வொரு வருடமும்** எங்கள் குடும்பம் தான் அதை எடுப்பது வழக்கம் என்பவர்களின் **பெயர்** பரீட்சை **தேர்வு பட்டியலில் காணப்படாது. ஆலயம்** கட்டியவர்கள் அதிக காணிக்கையை மிஷனரி பணிக்குகென்று கொடுத்தவர்களின் பெயர்களும் தேர்வு பட்டியலில் காணப்படாது.


பரீட்சை ரிசல்ட்டை **பள்ளி,** கல்லூரி விளம்பர போர்டிலோ **தினசரி பத்திரிகையிலோ**, கம்ப்யூட்டரிலோ காணும் பிள்ளைகள் தங்கள் **பெயர்** அல்லது **நெம்பர்** அதில் காணப்படாதததை காணும்போது அந்த பிள்ளைகளின் முகம் பேய் அறைந்ததுபோல் இருக்கும் என்று உலக மக்கள் கூறுவார்களே அப்படித்தான் கிறிஸ்துவின் வருகை நாளில் நம் சபைகளில் இருக்கும் பலருடைய முகங்கள் காணப்படும். **கைவிடப்பட்டவர்களாகவும்** பரீட்சையில் தோற்ற பிள்ளைகளைப்போலவும் காணப்படுவார்கள். அந்த **தோல்வியை** தாங்காமல் எத்தனை பேர் **யூதாஸ் காரியூத்** போல் நான்று கொண்டு (தற்கொலை செய்து) செத்து போகிறார்கள்.

பள்ளியோ அல்லது கல்லூரியோ படிக்கும்போது பரீட்சை தேதிக்குமுன் பெற்றோர் எத்தனை முறை எச்சரித்தார்கள் ! **வீடியோ கேம்** விளையாடியது போதும் **பரீட்சை நாள்** நெருங்கிவிருகிறது. உன் பாடங்களை படிபடி என்று எத்தனை முறை எச்சரித்தார்கள். எத்தனைமுறை பெற்றோர் வெட்கத்தை விட்டு உன்னிடம் அழுது கெஞ்சி கேட்டார்கள்? ஏன், **உன் நன்மைக்காகதானே!** உன் பிற்கால வாழ்க்கைக்காகத்தானே! அப்படி கெஞ்சினார்கள் **கோபப்பட்டார்கள்,** மொபைலையும் **பிடுங்கினார்கள்**. ஆனால் **நீயோ கோபப்பட்டாய்**, எச்சரிகையை **அலட்சியப்படுத்தினாய்**. ஆனால் **ரிசல்ட் வந்தபோது** உன் உள்ளம் எவ்வாளவாய் அழுதது. மற்றவர்கள்முன் உனக்கு **தலைகுனிவு** உண்டானதே!

அந்த மாதிரி நிலை **கிறிஸ்தவர்களுக்கும்** உண்டாகும். ஒரு நாள் வரும் மணவாளனாகிய **கிறிஸ்து வருவார்,** கிறிஸ்துவோடு வாழ **மணவாட்டிக்குறிய தகுதி** இல்லாது போனால் வசனத்தின்படி அவர் எதிர்பார்க்கும் **ஆவியின் கனிகளாகிய** கலா, 5:22 சுபாவத்தின் கனிகள் உன் வாழ்க்கையில் கானாது போனால் மணவாளனின் முன்பாக எத்தனை ஒப்பனைகள் செய்தாலும் அவைகள் யாவும் **வெறும் வேஷம்** என்பதை மணவாளனாகிய கிறிஸ்து அறிவார், வெளி வேஷத்தில் உன்னை காண்பித்து அவரை

ஏமாற்ற முடியாது, ஒரே வார்த்தையில் **உங்களை அறியேன்** என்று கூறிவிடுவார், எத்தனை சத்தமாக **அல்லேலுயா** என்று கத்தினாலும் ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரம்! என்று கூறினாலும் அது அவர் காதில் ஏறாது,

ஆயத்தத்துடன் இருப்பவர்களை மட்டும் மணவாளன் தன்னுடன் அழைத்துக்கொண்டு மணவரை வாசலை திறந்து உள்ளே சென்றுவிடுவார், கைவிடப்பட்ட **ஐந்து** கன்னிகைகளைப்போல் வாசலுக்கு வெளியே அழுது கொண்டிருப்பாய், எத்தனை அழுதாலும் கதறினாலும் **முகம் குப்புற விழுந்து அழுதாலும் முழு இரவும்** அக்கினி **அபிஷேகம் இறங்குகிறது** என்று வாய் கிழிய **கத்தினாலும்** பிரயோஜனம் இல்லாமல் போகும்.



- ☐ உலக பிரசித்திப்பெற்ற பிரசங்கியார் Dr. ரவி சகரியா அவர்களின் முடிவுபோல ஆகிவிடும், அவர் பிரசங்கம் கேட்டு மெத்த **படித்தவர்கள்,** உயர்ந்த **உத்யோகஸ்தர்கள்,** நாட்டை ஆளுகின்ற பெரும் **பதவியில் உள்ளவர்கள்** மனம் திருந்தினார்கள். தங்களின் பல கேள்விகளுக்கு விளக்கம்பெற நாட்டை ஆளுகிறவர்கள் கூட **Dr. ரவி சகரியாவை** நேரில் காண வருவார்களாம்.

**கடவுள் இல்லை** என்று கூறும் நாத்திகவாதிகள், **ஆதியாகமம்** பொய் என்று கூறியவர்களை **கடவுள் உண்டு** என்று உணர செய்தவர், **டைனோசர்** என்ற உலகிலேயே மிகப்பெரிய மிருகம் தோன்றிய காலம் **பல கோடி வருடங்கள்** என்று ஆராய்ச்சிகள் கூறும்போது **ஆதியாகமத்தின் காலம்** வித்தியாசப்படுவதை சுட்டிக்காட்டி வேதத்தில் **முரண்பாடுகள்** உண்டு என்று கூறிய **சரித்திர ஆராய்ச்சியாளர்களை** வேத வசனத்தையும், உலக சரித்திர சான்றுகளையும் ஒப்பிட்டு காட்டி வேத புத்தகம் நூற்றுக்கு நூறு உண்மை என்று நிரூபித்தவர்.

அவரை வேதத்தையும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரையும் பற்றியும் கேள்வி கேட்டு **ரவி சகரியாவை** திணரடிக்க பல **சர்வ கலா சாலைகளில்** விசேஷ கூட்டம் அமைத்து உலகத்தின் பல பாகங்களிலிருந்து மிகப்பெரிய படிப்பு படித்த **ஞானிகளையும்** அழைத்து **Dr.சகரியாவிடம்** பல கேள்விகளை கேட்டு அவரை அவமானப்படுத்த, கிறிஸ்தவ விசுவாசம் **பொய்யானது** என்று நிரூபிக்க **Dr. சகரியாவை** நடுவில் உட்காரவைத்து கேள்விக்

கனைகளை தொடுத்தார்கள், அத்தனைக்கும் தாமதிக்காமல் அடுத்து அடுத்து பதில் கூறி கேள்வி கேட்ட **அறிஞர்களை** திணரடித்த பெருமை **Dr. ரவி சகரியா** அவர்களுக்கு உண்டு,

**Dr. ரவி சகரியா இன்டர்நேஷனல் சங்கம்** மூலம் உலகின் பல நாடுகளில் ஏராளமான சபைகளை ஸ்தாபித்து பல கோடி ரூபாய்களை **மாதம் தோறும்** அவர்களுக்கு அனுப்பி ஊழியத்தை வளர்த்தினர்.

இவர் மூலமாக இரட்சிக்கப்பட்டு மனம் திரும்பி இன்று **பெரிய பிரசங்கிமார்களாய்** பலர் ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள்,

Online மூலம் கேள்வி கேட்கும் பலருக்கு Onlineல் விளக்கங்கள் கொடுத்து பலருடைய ஆவிக்குறிய சந்தேகங்களை தீர்த்தவர்,

**பரிசுத்தத்தைப்பற்றியும்**, பரிசுத்தத்தை எப்படி காத்துக்கொள்வது என்பதைப் பற்றியும் **பல நூறு** புஸ்தகங்களை வெளியிட்டவர், ஆங்கிலத்தில் உயர்ந்த யாரும் உபயோகிக்காத வார்த்தைகளை சரளமாய் உபயோகித்து அவர் தன் புஸ்தகங்களை எழுதவதால் சாதாரண மக்களுக்கு அவர் **ஆங்கில செய்திகளை** படித்து புரிந்துகொள்வது கடினம் என்று கூற கேட்டிருக்கிறேன், அதிலும் **அவர் கருத்துக்கள்** மிக ஆழமுள்ளது, விளங்கிக்கொள்வது மிக கடினம்.

ஆனால் **ஒரு நாள்** அவரின் **அந்தரங்க பாவங்கள்** வெளிப்பட்டது, முதலாவது தான் **ஒரு டாக்டர்** என்று கூறிக்கொண்டதே **பொய்** என்று நிரூபித்தார்கள், அவர் **Ph.D.,** படித்தவர் அல்ல, பல நாடுகளில் பல சர்வ கலா சாலைகளில் கொடுத்த கவுரவ டாக்டர் பட்டங்கள் ஏராளம்,

அடுத்து இவருக்கு கோடி கோடியாய் **டாலர்களாக** உலகத்தின் பல பாகங்களில் வாழும் விசுவாசிகள் அனுப்பிய **காணிக்கைகளை தாய்லாந்தில்** உள்ள **மசாஜ்** செண்டர்களில் **நிர்வாண பெண்களிடம்** காம காளியாட்டங்களுக்கு அள்ளி கொடுத்து **சுகித்து வாழ்ந்தார்.**

இவருடைய ஊழிய சங்கத்தில் உள்ள 13 **போர்டு மெம்பர்கள்** அடிக்கடி கோடிக்கணக்கில் **தாய்லாந்து** போன்ற **வெளிநாடுகளில்** உள்ள **ஆபாச விடுதிகளுக்கு இவர் செலவு செய்வதை** கேள்வி கேட்க தயங்கினார்கள், இவர் ஞானமாக இவர் ஸ்தாபனத்தின் டிரஸ்ட் மெம்பர்கள் யாவரையும் தன் குடும்பத்தில் உள்ளவர்களாக பார்த்து அமைத்துக்கொண்டார், இவர் **மனைவி, மகன்கள்** இப்படி இவர் **குடும்பத்தினர்தான் ஸ்தாபனத்தின் டிரஸ்டுகள்,** ஆகவே துணிந்து தன் இஷ்டம்போல **டாலர்களை** அள்ளி

கொடுத்து **காம களியாட்டங்களுக்கு** செலவழித்தார், இவர் மரணத்துக்குபின் இவர் **மொபைலை** மிக நுனுக்கமாக அமைத்திருந்த **பாஸ்வேர்டை** கண்டு பிடித்து பார்த்தால் மொத்தம் 200 **பெண்களின் நிர்வாண படங்களையும்** அவர்கள் தொடர்புகளையும் அறிந்தார்கள்.

**தாய்லாந்தில்** இன்றைக்கும் இவரின் சொந்த சொத்தாக **நிலத்தையும் நீச்சல் குளத்தோடு** கூடிய **கட்டிடங்களையும்** அதில் நூற்றுக்காணக்கான பெண்கள் **நிர்வாணமாக** அமர்ந்து **பெரும் பணக்காரர்களுக்கு** உடலை **மசாஜ் செய்துகொண்டிருக்கிறார்கள்,** உலகின்பல்வேறு பகுதிகளில் உள்ள **பணக்காரர்கள்** இவர் மசாஜ் விடுதிகளில் பல நாட்கள் தங்கி **காம களியாடங்களில்** சுகித்து அனுபவித்து செல்கிறார்கள்.

பேதாததர்க்கு **அமெரிக்காவில்** இவர் வீட்டு அருகே SPA என்ற பெயரில் அதே மசாஜ் சென்டரை நிர்வாண பெண்களை கொண்டு நடத்துகிறார்.

**74 வயதான** டாக்டர் **ரவி சகரியாவின்** இந்த ரகசியங்கள் You Tube வெளியிடப்பட்டபோது அதை அறிந்த **ரவி சகரியா** அதற்காக **மன வருத்தப்படாமலும் மன்னிப்பு கேட்காமலும்** தன்பாவ வாழ்க்கையை தொடர்ந்ததினால் உலகமனைத்திலும் உள்ள **சபைகள்** இவருடைய **புஸ்தகங்களை** விற்பதை தடை செய்துள்ளார்கள், எந்த **புஸ்தக கடைகளிலும்** இவர் புஸ்தகங்கள் **விற்காதபடி** தடை செய்தார்கள்.

அமெரிக்காவின் பிரபலமான **கிறிஸ்டின் டைஜஸ்ட்** என்ற பத்திரிகையில் புகைப்படத்தோடு **ரவி சகரியாவின்** அந்தரங்க காம களியாட்டங்களை **பகிரங்கப்படுத்தினார்கள்.**

உலகத்தின் பெரிய மலை கவிழ்ந்ததைப்போல் உலகமனைத்திலும் உள்ள விசுவாசிகளும் இவரால் இரட்சிக்கப்பட்டவர் பெரிய ஊழியர்களும் இடிந்துபோய் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள், அவர்கள் அந்த அதிர்ச்சியிலிருந்து வெளிவர பல மாதங்களானது என்று ஒருவர் எழுதுகிறார்.

பாவத்தை செய்துகொண்டே **அசம்ப்ளி ஆப் காட்** என்ற சபையை நடத்தி மிகப்பெரிய கன்வென் பிரசங்கியான Dr.Rev. ஜிம்மி ஸ்வாகத், பாஸ்டர் ஜிம்பெக்கர் இவர்கள் யாரும் தங்கள் பாவம் உலகுக்கு தெரிந்த உடன் **TVயிலும்,** பத்திரிக்கையிலும் தங்கள் சபையான **அசெம்ப்ளி ஆப் காட் பிரதான சபையிலும்** பகிரங்க மன்னிப்பு கேட்டார்கள். அதில் ஜீம்மி **ஸ்வாகத்** மிகவும் கதரி அழுது மன்னிப்பு கேட்டார், அந்தப் படங்களை அவர்களைபற்றிய செய்திகளையும் என் **ஜாமக்காரனில்** பல வருடங்களுக்கு முன் எழுதி என் வாசகர்களை

எச்சரித்தேன், மிக அதிகமாக **அன்னிய பாஷைகளை** பேசி பிரசங்கித்தவரின் பாவ களியாட்டங்களை எழுதி **அன்னிய பாஷை** என்ற பெயரில் இவர்கள் பாவம் செய்துகொண்டே **அன்னிய பாஷை பேசியவர்கள்** மேலே குறிப்பிட்ட இவர்கள் இருவரும் தாங்கள் செய்த பாவங்களை **பகிரங்கமாக அறிக்கையிட்டு** தன் மனையிடம் **பிள்ளைகளிடம்** சபை மக்களிடம் அழுது **மன்னிப்பு கேட்டார்கள்,**

ஆனால் Dr. ரவி சகரியா **தன் வியாதி படுக்கையில்கூட** தான் பல வருடங்களாக செய்த பாவத்தை குறித்து சிறிதேனும் **மனஸ்தாபபடவில்லை,** மன்னிப்பு கேட்கவில்லை, அப்படியானால் மரணத்துக்குபின் இத்தனை பெரிய பிரபலமான **பிரசங்கியும்** ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை மனம் திரும்ப செய்து ஆத்தும ஆதாயம் செய்த இவரின் **மரணத்துக்குப்பின்** இவர் **ஆத்துமா எங்கு போயிருக்கும்** யூகித்து பாருங்கள், **தீர்ப்பு கூறவேண்டாம்** யூகிப்பதில் தவறில்லை !

இவர் ஐசுவரியவான் சென்ற **பாதாளத்துக்கா,** லாசரு சென்ற பரதீசுக்கா ! எங்கு இருப்பார்.

**பவுல்** கூறியதை போல **ஆவியில் ஆரம்பித்து மாமிசத்திலா முடிக்கிறீர்கள்** ?

இதை வாசிக்கிற நாமும் **ஜாக்கிறதையாக** இருப்போம், **பெரிய மலைகள்** எல்லாம் கவிழ்ந்து போனது, நாம் எம்மாத்திரம் என்றாலும் விழுந்துபோன **பெரிய ஊழியர்களை** பாராமல் நம் **ஆத்துமாவை** ஜாக்கிறதையாக பாதுகாப்போம், பாவத்தில் விழுந்த அந்த ஊழியர்கள் **செய்த பிரசங்கத்தில் கூறிய வசனத்தில்** தவறில்லை, அவர்களின் **செய்தி உண்மையானது,** அதை மட்டும் கவனித்து அதில் நலமானதை பற்றிக்கொண்டு , நாம் விழுந்துவிடாமல் நம்மையும் நம் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தி **கண்களை பாதுகாத்து சிந்தனைகளிலும் கறைபடாதபடி** உள்ளத்திலும் பாவ காரியங்களை குறித்து யோசிக்காதபடி நம்மை பாதுகாத்துக்கொண்டு அவர் வருகைக்கு அல்லது நம் மரணத்துக்கு ஆயத்தமாக இருப்போம்.

– டாக்டர் **புஷ்பராஜ்**

☐ வாசகர்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

☐ நீங்கள் யாவரும் அனுப்பும் **காணிக்கைகள்** Onlineலும் செக் DD வழியாகவும் பெற்றுக்கொண்டேன், நன்றி. உங்கள் தொடர் காணிக்கை உதவியால் **ஜாமக்காரன்** பத்திரிகை ஊழியமும் **தடை ஏதும்** இல்லாமல் தொடர்ந்து வெளியிட முடிகிறது, தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

# கலாநிதி சாம் கமலேசன்



**Rev. Dr. சாம் கமலேசன்** அவர்கள் **இலங்கை சத்திய வசன வானொலி** நிலையத்தாருக்கு அவர் வாழ்க்கையை பற்றி அளித்த நேரடி பேட்டி

**கேள்வி :** கலாநிதி சாம் கமலேசன் அவர்களே. உங்களுடைய மனைவி பிள்ளைகளைப்பற்றி எமக்கு கூறுங்களேன்.

**பதில்** :- எனக்கு **மூன்று** பிள்ளைகள் உண்டு. என் **மனைவி**யும் **நானும்** மெட்ராஸ் யூனவர்சிட்டியில் படித்து தேர்ந்தவர்கள். அவர் படித்தது **ஜுவாலஜி படிப்பு.** நான் படித்தது மிருக வைத்தியனாவதற்கான படிப்பு படித்து வெட்னரி டாக்டர் படிப்பை முடித்தேன்

**கேள்வி :** உங்களுடைய சொந்த ஊர்.

**பதில் :** நாங்கள் வளர்ந்தது **திருச்சி** பக்கம். ஆனால் முடிவிலே மெட்ராஸ் (சென்னை) கல்லூரிக்கு போய் சர்வ கலா சாலையிலே படிக்கும்போது மெட்ராஸ் நகரத்திலேயே தங்கிவிட்டோம். எங்களுக்கு மூன்று பிள்ளைகள் என்று சொன்னேன். **மூத்தவன்** பெயர் சுந்தரராஜ் அதற்கு பின் **ஒரு பெண்** அவளுக்கு பேர் நிர்மலா **மூன்றாவது** பையன் மனோகரன்.

**கேள்வி :** முக்கியமாக நீங்கள் எவ்விதமாக **இரட்சக்கப்பட்டீர்கள்** என்பதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறோம்.

**பதில் :** நான் **சன்மார்க்கம்** என்பது இன்னதென்று அறிந்திருந்தேன். சில குறிப்பிட்ட காரியங்களை **கிறிஸ்தவர்கள்** செய்யமாட்டார்கள் என்பதையும் அறிந்திருந்தேன். ஆனால் உண்மை கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கான **வல்லமையை** எப்படி பெறுவது என நான் **அறியாதிருந்தேன்.** எனக்கு அப்போது **20 வயதிருக்கும்** கால் நடை மருத்துவ கல்லூரியிலே (Veternary Medical College) படித்துக்கொண்டிருந்தேன். எனது அறை

**நண்பர்** ஒருவர் இருந்தார். அவர் பெயர் சங்கர் நாராயணன். தெருவிலே ஒருவர் நின்றுகொண்டு பிரசங்கித்த **தேவனுடைய செய்தியை** கேட்டவர். அந்த செய்தி **அவர் ஆத்துமாவை** தொட்டது. அன்று அவர் அறைக்கு திரும்பி வரும்போது அவர் ஒரு **புது மனிதனாக** காணப்பட்டார். அவர் ஆண்டவரோடு **ஒரு ஒப்பந்தம்** செய்து வந்திருக்கிறார் என்பது எனக்கு தெரியாது. தெரு பிரசங்கம் கேட்ட அவர் இயேசுவோடு ஜெபிக்கும்போது இயேசுவிடம் அவர் கேட்டது என்னவென்றால். நீர் **உண்மையான தெய்வமென்றால்** என்னுடைய வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் என்னை **அசுத்தத்திலிருந்து விடுதலை** செய்ய வேண்டும் என்றும் ஜெபித்தார். அப்படி நீர் என்னை **பாவத்திலிருந்து** விடுதலை செய்வீர் என்றால் **என்னுடைய வாழ்க்கை முழுவதும்** உமக்குரியது என கூறியிருக்கிறார். அந்த இயேசு அவரை ஆட்கொண்டு அவரை மாற்ற தொடங்கினார். அவரில் **ஏற்பட்ட பல மாற்றங்களை** நான் **கண்கூடாக** கண்டேன். இந்த மாறுதலுக்கு யார் காரணம் என அவரிடம் கேட்டால் கொஞ்சம்கூட தயக்கமில்லாமல் **இயேசுதான்** எனை **புது மனுக்ஷனாக** மாற்றினார் என்று தெளிவாக சொல்வார்.

இதை நான் பார்த்துக்கொண்டே இருந்தபோது **கிறிஸ்தவனாகிய** எனக்கு இந்த ஆவிக்குறிய புதுவிதமான உணர்வு இல்லை என்பதை உணந்தேன். நானும் என் அறை å õ Ãò D **பெங்களூர்** நகரத்தின் அருகில் இருக்கும் (Hosur Catel Form) பண்ணையிலே பணி புரிந்து வந்தோம்.

என் அறை நண்பரை **சங்கர்** என நாங்கள் அழைப்போம். ஒரு நாள் சாயங்காலம் இருவரும் நடந்து கொண்டிருந்தபொழுது அவரைப்பார்த்து **சங்கர்** உன்னுடைய வாழ்க்யிலே **பெரிய மாறுதல்** வந்து விட்டது! நீ கிறிஸ்துவாகிய ஆண்டவரோடு ஒப்புரவாகி அவரோடு கலந்துவிட்டாய், இதை நான் **உன் நடவடிக்கையில்** பார்க்கிறேன். எனக்கு சில காரியங்கள் என் வாழ்க்கைக்கு தேவை என்று உணறுகிறேன். இதற்காக நீ அந்த ஆண்டவரிடத்திலே வேண்டுதல் செய்வாயா? என கேட்டேன். காரணம், உண்மையில் கிறிஸ்தவனாகிய என்னுடைய **வாழ்க்கை** மாறவேண்டும். என்றோ அவரோடுள்ள அனுபவம் பெறவேண்டும் என்றோ எண்ணமே உண்மையில் எனக்குக் கிடையாது. சும்மா என் தனிப்பட்ட முறையில் உலக பிரகாரமான எனக்கு வேண்டியதைப் நான் பெற்றுக்கொள்வதற்காக இந்த ஆள் ஆண்டவரித்திலே என்னைப்பற்றி பேசுவாரேயென்றால் ஒருவேளை ஆண்டவர் எனக்குக் அவைகளை கொடுப்பாரே ! என்ற சுயநல எண்ணத்தோடுதான் எனக்காக ஆண்டவரிடம் பேசுவாயா என்று கேட்டேன். அவரும் உடனடியாக ஜெபிக்கிறேன் என்று கூறி

விட்டார், ஆனால், நான் உனக்காக **ஜெபிப்பதற்கு முன்பாக** நீ ஆண்டவர் சொல்லியிருக்கும் **சில நிபந்தனைகளை** ஏற்க வேண்டும் என்றார்.

உடனே நான் என்ன யோசித்தேன். என்றால் ஏதாவது ஏதோ பெரிய கட்டுப்பாடு (கன்டிசன்) இருக்கும்போல இருக்கு என்று யோசித்து **என்னையா கன்டிசன்** என்று கேட்டேன். **சாம்,** நீ **கிறிஸ்தவன் தானா** என்று கேட்டார். அவர் அப்படி கேட்டதும் **எனக்கு அதிர்ச்சி** ஏற்பட்டது, ஏனென்றால் **பரம்பரையாக நான்** கிறிஸ்தவ குடும்பத்தில் வந்தவன். என்னிடத்தில் வந்து **நீ கிறிஸ்தவன்தானா ?** என்று கேட்கிறாரே. அப்படி இவர் என்னைப்பார்த்து கேட்க இவருக்கு என்ன அதிகாரம் உண்டு !. என்றெல்லாம் எனக்குள் எண்ணம் ஓடிற்று. ஆனால் இவர் எனக்காக ஜெபித்தாக வேண்டுமே! நான் வெருமனே அவர் மேல் கோபப்பட்டு பிரயோஜனமில்லை என்பதற்காக என் கோபத்தை அடக்கிக்கொண்டு என்னையா என்னிடத்திலே வந்து நான் கிறிஸ்தவனா என்று கேட்கிறீரே ? நான் **கிறிஸ்தவன்** என்பதை நீர் அறிவீரே என்றேன் உடனே அவர் சொன்னார் **சாம்** நீங்கள் நல்ல அழகான **கிறிஸ்தவ பரம்பரைதான்** பழக்கமெல்லாம் நல்லதுதான். ஆனால் உண்மையிலேயே நீ **மறுபிப்பு பெறாவிட்டால்** கிறிஸ்தவனில்லையே! என்றார். வேதத்தில் எங்கே **மறுபிறப்பைப்பற்றி** கூறியிருக்கிறது? என்று கேட்டேன். அவர் வேதத்தைக் கையிலேயே வைத்திருந்தார். திறந்து **யோவான்** எழுதின சுவிசேஷம் **மூன்றாவது** அதிகாரத்திற்கு என்னை கொண்டுபோய் வசனத்தை தெளிவாகக் காட்டினார். **ஒருவன் மறுபடியும் பிறாவாவிட்டால்** தேவனுடைய ராஜ்ஜியத்தைக் **காணவே மாட்டான்** என்று இயேசு சொல்லியிருப்பதை நான் வாசித்து பார்த்தேன்.

உடனே எனக்கு **இரண்டு சத்தியங்கள்** வெளியாயிற்று அது என்னுடைய நண்பர் சொல்லமலேயே வெளியாயிற்று. ஒன்று நான் சரியான **கிறிஸ்தவனாக** வேண்டுமேயென்றால் என்னை கிறிஸ்தவனாக்கும் அதிகாரமுள்ளவர் **இயேசு.** அவர் **வார்த்தைக்கு** கீழ்படிந்து அடங்கவேண்டும். அவர் **கட்டளை** என்ன? நீ **மறுபடியும் பிறக்கவேண்டும்.** இரண்டாவதாக வேதத்தில் அந்த **கட்டளையை யாருக்குக்** கொடுத்தார்? **நேர்மையே** உருவானவனாக இருந்த **நிக்கோதேமு** என்ற ஒருவனிடம் கூறினார், அவனிடத்திலே நீ **மறுபடியும் பிறக்க** வேண்டுமென்று சொன்னால் எல்லாவற்றிலும் **நேர்மையாக வாழ்ந்த அவனுக்கே** இது தேவையென்றால் **எனக்கும் அது தேவைதானே!** இந்த இரண்டு சத்தியமும் உடனே எனக்கு வெளியாயிற்று

என்னுடைய வாழ்க்கையிலேயே அது தேவனுடைய நேரம். ஆகவே ஆண்டவர் என்னோடு நெருங்கிபேச தொடங்கினார். நான் அந்த நண்பரிடம், சங்கர், நான் **மறுபடியும்**

**பிறக்க வேண்டுமானால்** நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டேன் அவர் சொன்னார், நீங்கள் செய்து ஒன்றும் ஆகாது, முதலாவது நீங்கள் **பாவத்திலே** பிடிபட்டவங்க என்பதை உணரவேண்டும். இயேசு செய்ததைப் பாருங்க, அவர் **உங்களுக்காக மரித்தார்.** உங்களுக்காக **உயிர்தெழுந்திருக்கிறார்.** நீங்கள் **பாவி** என்பதை ஒத்துக்கொள்வீர்களா? என்றார். நீங்கள் அப்படி செய்தால் **இரட்சகர்** என்ற பொருத்தத்திலே அவர் உங்களோடு **பொருந்துவார்.** ஒத்துக்கொள்கிறீர்களா? என்று கேட்டார். **நிச்சயமாக ஒத்துக்கொள்கிறேன்** என்று சொன்னேன். உடனே அங்கேயே **அந்த தெருவிலேயே** கால்களை முடக்கி ஜெபித்தேன். நான் வேலை பார்ப்பது ஒரு **பண்ணை** என்று சொன்னேன் அல்லவா. அது வெரும் தூசி படர்ந்த ஒரு பாதை. அங்கேயே **கால்களை முடக்கி** ஜெபிக்க தொடங்கினோம். **அன்றைய வாழ்க்கையிலேயே** எனக்குள் இருக்கும் சில **பழக்க வழக்கங்களையும்** இயேசுவிடம் கூறி, ஆண்டவரே இவற்றிலிருந்து எனக்கு முடிவான வெற்றி வேண்டும்என்று கூறினேன். **அன்றைய தினம் இரவே** என் பாவ பழக்கத்தை முறித்து **என்னை விடுவித்து என் இதயத்தில்** நடுநாயகராக வந்த என் ஆண்டவர் **இன்று** வரை என்னைக் காப்பாற்றி **நடத்தி வருகிறார்.**

**கேள்வி :** கடைசியாக எமது சத்ய வசன வாசகருக்கு நீங்கள் எதையேனும் கூற விரும்புகிறீர்களா?

**பதில் : முதலாவது** ஒரு வேண்டுகோள் அது என்ன வென்றால். சாம் கமலேசன் என்ற என் பேர் சொல்லி என்னை **ஜெபத்திலே அவர்கள் நினைச்சுக்கனும்.** அப்படி செய்யனும்னு தயவாக கேட்கிறேன். உலகெங்கும் ஒவ்வொரு நாடாக நான் போய் வரும்போது எனக்காக **ஜெபிக்கிறவங்க இல்லைன்னா** அதுவெறும் **மனுஷ வார்த்தையா** முடிஞ்சிடும். அது **தேவ வசனமா** இருக்கனும்னு யாராச்சும் **என் பெயர் சொல்லி** என்னை தாங்கும்படி ஜெபிக்கனும்.

**இரண்டாவது** நான் சொல்ல விரும்புவது என்னான்னா நீங்க எந்த கஷ்டத்தில் இருத்தாலும் எந்த துக்கத்தில் இருந்தாலும் **மாறாத கிறிஸ்து** அவர் உங்களைக் **காப்பேன்** என்று வாக்கு கொடுத்திருக்கிறார். இது அவருடைய குணாதிசயம், **சொன்ன வாக்கை நிறைவேற்றுவதும்** அவருடைய குணாதிசயம். பரி, பவுலில் 2 திமோத்தேயு 2ம் அதிகாரம் 13ம் வசனத்தை எடுத்து வாசித்து பாருங்கள். **மாறாத ஆண்டவர்** உங்களை விட்டு **பிரியாது.** உங்களை **கரம் பிடித்து நடத்துகிறார்.** என்று எழுதியிருக்கிறது.

**மூன்றாவது** காரியம் நம்ம எல்லாருக்கும் இந்த உலகில் வாழும் காலம் **கொஞ்சம் தான்.** திடீர்னு நாம் அறியாத நேரத்திலே ஆண்டவர் உன் வாழ்க்கை **முடிந்தது** என்று சொல்ல நாம் இந்த **உலகத்திலிருந்து போக வேண்டியவர்கள் ஆகும்.** ஆக அழியாத ஒரு காரியம் என்னன்னா. நீங்கள் யாராவது ஒருவர் கிட்ட **இயேசுவைப்பற்றி** சொல்லி **அவரை ஆதாயப்படுத்தனும்**. நூறு பேர் , ஆயிரம் பேர்கிட்ட சொல்லவேண்டிய அவசியமே இல்ல. இயேசு சுவாமி உலகத்திலே இருக்கும்போது **12 பேருக்கு** தன்னுடைய முழு நேரத்தை கொடுத்தாரு. அவர்கள் மூலமாக முழு உலகமே இயேசுவை இரட்சகர் என்று அறிய முடிந்தது. அதே வண்ணமாக நம் சுற்றுவட்டாரத்திலே யாராவது ஒருவர் இரண்டு பேரைத் தெரிந்தெடுத்து அந்த இரண்டு பேரை ஜெபத்தில் சொல்லி ஜெபித்து, சுவாமி என்னுடைய இந்த உலக யாத்திரை முடிவடைதற்குள்ளாக இவங்கள உமக்கென்று **தேர்ந்த விசுவாசிகளாக** தயார் செய்ய வேண்டும் ! என்று ஜெபிப்பது அதை பரிசுத்த ஆவியானவரின் பெலனை கொண்டு செய்யனும். இப்படி ஒவ்வொருத்தரும் செய்வாங்கன்னா சீக்கிரமா நம் தேசத்திலே அநேகர் இயேசுவுக்காக எழுந்து நிற்கும் வீரர்களாக மாறுவாங்க.

இந்த மூன்றையும் இந்த பேட்டியை பார்ப்பவர்கள், வாசிப்பவர்கள் செய்வார்கள் என்றால் **எனக்கும், கர்த்தருக்கும்** பரம திருப்தியாக இருக்கும்.

நன்றி.

- Dr. Rev. சாம் கமலேசன்

## ONLINE BANKING (NEFT)

### Name : M G E PUSHPARAJ

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# கிருபையோடு கூடிய அற்புதம்

என்னை **ஜெபத்திலும், காணிக்கையாலும்** தாங்கிவரும் வாசகர்களுக்காகவே Dr. புஷ்பராஜ் (ஜாமக்காரன்) ஆகிய என்னுடைய Bank Balance வங்கியில் உள்ள கையிருப்பை ஜாமக்காரன் பத்திரிகையில் ஒவ்வொரு வருடமும் வெளியிடுவது வழமையானதொன்றாகும்.

எனக்கு **இரண்டு** வங்கியில் மட்டும் **வரவு – செலவு** உண்டு.

1) (SBI) State Bank of India, Srirangapalayam Branch, **Salem**
2) CANARA BANK, Suramangalam Branch, **Salem**

இரண்டு வங்கியிலும் 2022 **மார்ச்** மாதம் வரை உள்ள கையிருப்பின் மொத்த தொகை விவரம் சமர்பிக்கிறேன்.

SBI State Bank of India, Srirangapalayam Branch, SALEM

PPO Number :

**Generally used abbreviations**

| | | |
|---|---|---|
| a/c = Account | dep = Deposit | Pr = Principal |
| adj - Adjustment | Dft = Draft | proc = Processing cha |
| Amt = Amount | dish/dsh = Dishonour | rd = Recurring Deposi |
| Ar = Arrear | DR = Debit | ret/rtn = Return |
| bal = Balance | DoB = Date of Birth | Rnd = Round of |
| Capn = Capitalization | eft = Electronic Fund Transfer | sb = Savings Bank |
| chg/ch = charge | Inop = Inoperative | SC = Short Credit |
| chq = Cheque | ins = Insurance | SI/So/SORD = Standin |
| Clos = Closure | int/in = Interest | S/D/W/H/o = Son/Daug |
| coll = Collection | lon/ln = Loan | tr/trf/xfer = Transfer |
| comm = Commission | min = Minimum | TT = Telegraphic Transfer |
| COR / CORR = Correction | os = Outstanding | txn = Transaction |
| CR = Credit | P & T = Postage & Telegram | Wdl = withdrawal |
| csh = Cash | Pos = Point of sale | +Mod bal = total balance (Sb+linked MOD a/c) |



भारतीय स्टेट बैंक State Bank of India
Branch: SRIRANGAPALAYAM (SALEM) Code: 1970
11/289, RAMKRISHNA ROAD, SALEM.
Email:SBI.01970@SBI.CO.IN
Phone No.: 2312794 Buss. Hrs:09:45:00-16:45:00
IFSC: SBIN0001970 MICR: 636002003

Name: DR PUSHPARJ M G E
S/D/H/o : MANGALAVADHANI MOP: SINGLE
CIF Number : 80611525258 A/c Opening Dt: 25/04/1998
Account No.: 10764116842 Nom Reg No: 0000000219132225
A/c Type : REGULAR SAVINGS BANK ACCOUNT Customer's PAN: ADEPM5593P
Address : 89 & 90, MAJEETH STREET, Date of Issue: 05/03/2022
OLD SURAMANGALAM CONTINUATION
SALEM -5, SALEM-TALUK
Phone No. : 04272387499
Email :
D.O.B.(If Minor):

शाखा प्रबंधक
Branch Manager

| DATE | PARTICULARS | CHEQUE NO. | DEBIT | CREDIT | BALANCE |
|---|---|---|---|---|---|
| | | | | Brought Forward | 44096.95 CR |
| 24.03.22 | eCHQ:MAC000950876636 NEFT20TR0NG23SBIN422073983737 IOB8000F0094INDIAN BANK MONOVMO: XX0186 | 000824587 | 12004.72 | 3000.00 | 32092.23 CR |

Uncl Bal: 0.00 Clr Bal: 32092.23 Cr;+MOD BAL: 0.00
Uncl Bal: 0.00 Clr Bal: 34487.51 Cr;+MOD BAL: 0.00

24-03-22.......................................................................................................Balance 32092 23

# CANARA BANK, Suramangalam Branch, **Salem**

Nominee Name: Nominee RegNo:

केनरा बैंक Canara Bank



NAME AND ADDRESS OF BRANCH:
SALEM SURAMANGALAM
CANARA BANK
58, POST OFFICE,MAIN ROAD
SURAMANGALAM
SALEM
TAMIL NADU-636005
**IFSC Code:CNRB0001219 MICR Code: 636015005**
Tel No.9489043430 Fax No:1
Email ID:cb1219@canarabank.com

Contact details of Banking Ombudsm
The Banking Ombudsman
C/o. RBI
Fort Glacis
Chennai
Chennai-600001
Tel.No.0000/0000
Fax.No.0 Email ID:bochennai@rbi.org.in

ACCOUNT DETAILS: Account No:1219101013622

NAME(S) PUSHPARAJ M.G.E

Occupation X - not categorized
Address 89 90 MAJID STREET,OLD SURAMANGALAM ,SALEM-636005-TAMIL NADU-INDIA PIN/ZIP number: 636005

**Customer ID : 27605332** D.O.B : 13-NOV-1941
A C Opened On 16-MAY-1987
Mode of Operation:SELF PB Issue Date:20-SEP-2021
Mobile:919894261333 Email:

खाता सं A/c No.

| क्रम सं. Sl. No. | तारीख Date | विवरण Particulars | चेक संख्या Ch No. | निकासी Withdrawals | जमाराशियाँ Deposits | शेष Balance | आद्याक्षर Initials |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | |
| 02 | | | | | | | |
| 03 | | | | | | | |
| 04 | 20/03/2022 | SMS ALERT CHARGES NEW | | 18.00 | | 20853.06 | |
| 05 | 22/03/2022 | SI 0819101102781 G IGEY MATHEW DR MGE PU SHPARAJ | | | 1000.00 | 21853.06 | |
| 06–07 | | | | | | | |
| 08 | 22/03/2022 | CASH-BNA-0938 0938BY0 0 1- 22/03/22 11:52:45 | | | 10000.00 | 31853.06 | |
| 09 | | | | | | | |
| 10 | | | | | | | |
| 11 | 24/03/2022 | Chq Paid-MICR Inward Clearing-PRINTECH COM PUTER-CITY UNION BANK LTD-CITY UNION BANK LTD. | 49346480 | 14000.00 | | 17853.06 | |
| 12–15 | | | | | | | |
| 16 | 25/03/2022 | Cash Deposit SELF BLR NANDI | | | 5000.00 | 22853.06 | |

25-03-2022..........................................................................................................Balance 22853 06

இரண்டு வங்கிகளின் கையிருப்பு தொகை மிக குறைவாக காணப்படுகிறதே இனி வரும் நாட்களில் ஜாமக்காரன் பத்திரிகை மாதம் தோரும் **தமிழ் & மலையாளம்** இரண்டு

பாஷைகளிலும் அச்சிட ஆகும் **அச்சக செலவு – பேப்பர் செலவு** அவைகளையும், பத்திரிகைகளை அனுப்ப **தபாலில் சேர்க்க ஸ்டாம்ப் செலவுகளையும்** பத்திரிகையை **கவரில்** இடுவதற்கு **கவர் தயாரிக்கும்** செலவு, அலுவலகத்தில் உள்ள **கம்யூட்டர் அலுவலர் சம்பளம்.** இன்னும் இதர போக்கு வரவு செலவுகளுக்கு **பல லட்சம் ரூபாய்கள் தேவைப்படுமே!** எப்படி சமாளிக்க போகிறீர்கள் என்று பலருக்கு கேள்வி எழலாம். இந்த விஷயத்தை குறித்துள்ள அற்புத விவரத்தை ஒவ்வொரு வருடமும் ஜாமக்காரனில் வெளியிடுகிறேன். இது இவ்வூழியத்தை **என்னிடம் ஒப்புவித்த** என் ஆண்டவர் இதுவரை எனக்கு தொடர்ந்து எனக்கு வழமையாக செய்யும் **கிருபையுள்ள அதி அற்புதம்தான் அது.**

**ஜாமக்காரனில்** குறைகளை மட்டும எழுதும் **பிசாசின் ஆவி** Dr. புஷ்பராஜ் அவர்களை வழி நடத்துகிறது என்று **தவறு செய்யும். பொய் பேசும் ஊழியர்களும் காணிக்கை** பணத்தில் **ஊழல் செய்யும் ஊழியர்கள்** மட்டுமே எனனைப்பற்றி அவ்விதமாக கூறுவார்கள். மேலும் **அந்தவிதமான பொய் ஊழியர்களை** நம்பும், அவர்களை **நேசிக்கும்** அவர்களின் **சபை மக்கள்** அல்லது அவர்களின் **வாசகர்கள்** மேலும் அவர்களின் **விசிறிகளும்** அப்படிப்பட்ட குற்றசாட்டுகளை என்னைப்பற்றி கூறுவார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஊழியர்கள் யாருக்கும் செவி சாய்க்காமல் **வசனத்தை மட்டும்** நம்பும் **விசுவாசிகள்** சில **நல்ல ஊழியர்கள்** யாவரும் **என்னை நம்புவார்கள், அப்படிப்பட்டவர்கள் என்னையும்** என் ஊழியத்தையும் **ஜாமக்காரனில்** நான் எழுதும் கர்த்தருடைய **செய்திகளையும்** விமர்சனங்களையும் **உண்மை என்று நம்புவார்கள்.** இப்படிப்பட்டவர்களைக்கொண்டு தான் கர்த்தர் **இந்த ஊழியத்தை** கடந்த **58 வருடங்களாக** குறையில்லாமல் **கடன் இல்லாமல்** மிக வெற்றிகரமாக நடத்திவருகிறார். கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

**கொரோனா** வாதை காலங்களில் பல பெரிய (ஸ்டார்) நட்சத்திர ஊழியர்களின் **பத்திரிக்கைகளெல்லாம்** நிறுத்தப்பட்டன. ஆனால் **ஜாமக்காரன்** தமிழ் மற்றும் **மலையாளம்** ஆகிய இரண்டு பாஷைகளிலும் வெளியிடும் **பத்திரிக்கைகள் மட்டும்** ஒரு மாதம் கூட நிறுத்தப்படாமல் அனைவரின் வீடுகளுக்கும் சென்றடைந்தன.

அதை வாசித்து **நன்மை பெற்றவர்கள்** எழுதிய சாட்சிகள் மிக அற்புதம் ஒரு வேளை இப்படிப்பட்டவர்களுக்கு **ஜாமக்காரன் தெளிவை தருவதால்தான்** கர்த்தர் தொடர்ந்து என்னை உபயோகித்து வருகிறார் என்று நினைக்கிறேன். **பத்திரிகை மூலமாக வெப்சைட் மூலமாக ஜாமக்காரனை** வாசித்தவர்கள் எண்ணிக்கை ஆயிரத்தில் அல்ல **பல லட்சங்களில்** என்று கணக்கு சொல்கிறது.

அப்படியே Websiteல் வாசிப்பவர்களை தவிர **162 தேசங்களில்** வாழும் ஜாமக்காரன் வாசகர்களுக்கும் **லட்சக்கணக்கான** ரூபாய் மதிப்புள்ள **ஸ்டாம்புகள்** செலவழித்து ஒவ்வொரு மாதமும் இரண்டு பாஷைகளிலும் ஜாமக்காரன் வாசகர்களுககு அனுப்படுகின்றன. அவை ஒன்றும் வீண்போவதில்லை. ஒவ்வொரு மாத ஜாமக்காரன் செய்திகளும் வாசகர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறது.

☐ இப்படிப்பட்ட பிரயோஜனமுள்ள இந்த ஜாமக்காரனை கர்த்தர் எப்படி நிறுத்துவார்? மேலே **வங்கி பாஸ்புக்கில்** காணப்படும் **கையிருப்பு** குறைவாக காணப்பட்டாலும் நாட்கள் கூடகூட **பணவரவு** தானாக கூடும். **வாசகர்களுக்கு** எப்படிதான் தெரிகிறதோ! என் தேவைகள் அதிகமாகும்போது அவர்கள் அனுப்பும் காணிக்கையின் தொகைகளும் கூடும். இது **அற்புதம் தானே. இது கர்த்தரின் கிருபையுள்ள கிரியைதானே !**

இதில் **மற்றொரு அதிசயம்** என்னவென்றால் என் **பண** தேவைகளை குறித்து ஒரு நாளும் **மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ** ஜாமக்கரனில் **நான் எழுதியதில்லை** என்பதற்கு வாசகர்களாகிய நீங்களே சாட்சிகள்.

மற்றொரு **முக்கிய செய்தியை** கூறுகிறேன். இப்போது நான் எழுதப்போகும் விஷயத்தை பெரும்பாலானவர்கள் நம்ப மாட்டார்கள். அந்த விஷயம் என்ன தெரியுமா? **இதுநாள் வரை என் பணத்தேவைக்காக** என்னை நடத்தும் என் தெய்வத்திடம் **ஜெபம் செய்ததேயில்லை** இதை உங்களால் நம்ப முடிகிறதா? நம்புவதற்கு கொஞ்சம் சிரமம்தான் ! ஆனால் அதுதான் உண்மை.!

ஏனென்றால் இது **கர்த்தருடைய ஊழியம்.** வித்தியாசமான இந்த முக்கிய ஊழியத்தை **யாரும் செய்ய துணிய மாட்டார்கள்.** அதாவது ஊழியர்கள் **சபை தலைவர்கள்** பலர் வசனத்துக்கு விரோதமாக செய்யும் **தவறுகளை,** தவறான **உபதேசங்களை, ஊழல்களை** நான் ஜாமக்காரன் பத்திரிக்கையில் வெளிப்படையாக சுட்டிக்காட்டி எழுதுவது **எனக்கும், என் குடும்பத்துக்கும்,** உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்தை உண்டாக்கும் ஊழியமாகும். கடந்த காலங்களில் எத்தனை **மிரட்டல்கள்,** எத்தனை **வக்கீல் நோட்டீஸ்கள்** எனக்கு வந்தது தெரியுமா? இத்தனை **எதிர்ப்புகளையும்** சந்தித்துதான் கடந்த **58 வருடங்களாக** என் ஊழியங்களை நிறைவேற்றி வருகிறேன்.

☐ஒவ்வொரு வருடமும் என் **வரவு செலவு** கணக்குகளை சென்னையில் உள்ள **என் ஆடிட்டர்** அவர்களுக்கு அனுப்பி அவைகளின் **வரவு - செலவு** விவரங்களை ஆடிட்டர் அவர்கள்

சரி பார்த்து அதை **வருமான வரி துறை** அலுவலகத்துக்கு அனுப்பி ஒவ்வொரு வருடமும் அதற்கான **சர்ட்டிபிகட்டையும்** பெற்று பத்திரப்படுத்துகிறேன்.

இதனால்தான் பண விஷயத்தில் **குற்றம்** அல்லது தவறுகள் எதுவும் உண்டாகாதபடி யாரும் என்னை குறை சொல்லாதபடியும் **பண விஷயத்தில்** மிகவும் **உண்மையாக** நடந்து **மனுஷருக்கு** முன்பாகவும் **கர்த்தருக்கு** முன்பாகவும் யாரும் குற்றம் சொல்லாதபடியும் ஜாக்கிறதையோடு **ஊழியத்தை நிறைவேற்றுகிறேன்.**

**மார்ச்** மாத வங்கி **கையிருப்பை** கண்டு **எப்படி சமாளிக்க போகிறீர்கள்** என்று பலருள் கேள்வி எழுந்தது அதற்கு ஒரே ஒரு பதில்தான் என்னிடம் உண்டு. **நாம் கர்த்தருக்கு** உண்மையாக இருந்தால் **கர்த்தரும் நம் விஷயத்தில்** உண்மையாக இருப்பார். மேலும் பண தேவைகளக்கு நான் என் வாசகர்களை முழுமையாக எதிர்ப்பார்த்ததில்லை. காரணம், ஜாமக்கரனில் நான் எழுதும் சில கருத்துகள் சில வாசகர்களுக்கு பிடிக்காமல் போகும்போது **உடனே** அவர்கள் **காணிக்கைகளை** எனக்கு அனுப்புவதை **நிறுத்தி விடுவார்கள்,** அதனால் தான் என் **ஊழிய பண தேவைகளுக்கு** கர்த்தரை தவிர யாரையும் எதிர்பார்ப்பதில்லை. மேலும் என் கர்த்தர் **நான் கேட்பதற்கு முன்பே** எனக்கு **இன்னது தேவை** என்று அறிந்திருக்கிறார். கர்த்தர் ஜாமக்காரன் ஊழியத்தை காணிக்கைகளால் தாங்க **பலருடைய உள்ளங்களை உணர்த்துகிறார்.** அவர்கள்தான் மாதம் தவறாமல் தொடர்ந்தும் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை எனக்கு பணம் அனுப்பி பத்திரிகையை கடன் இல்லாமல் நடத்த அவர்கள் மனதை ஊக்குவிக்கிறார். கர்த்தருக்கே மகிமை ! கர்த்தர் ஒருவருக்கே சகல கனமும் மகிமையும் உண்டாவதாக. எனக்கு கொடுக்கப்பட்ட ஊழியம் மூன்று !

***1. அறிவிப்பது*** ஜாமக்காரன் பத்திரிகை மூலமாகவும் சபைகளில் நான் செய்யும் பிரசங்கம் மூலமாகவும் மக்களுக்கு தேவ செய்திகளை அறிவிப்பது வசன விளக்கங்களையும் அறிவிப்பது வருகையை குறித்து அறிவிப்பது. கள்ள தீர்க்கதரிகளை, ஊழியர்களை அவர்கள் பெயர் குறிப்பிட்டு வாசகர்களுக்கு அடையாளம் காண்பித்து எச்சரிப்பது.

***2. எச்சரிப்பது*** தேவ வசனங்களுக்கு விரோதமாக நடக்கும் ஊழியங்களை, ஊழியர்களை எச்சரிப்பது. வாசகர்களை இப்படிப்பட்ட ஊழியர்களிடம் எச்சரிக்கையாக இருக்க ஆலோசனை சொல்வது என்பது என் ஊழியத்தின் ஒரு பாகமாகும்.

***3. ஆதிவாசிகளுக்கு சுவிசேஷம் அறிவிப்பது ஆகும்.*** இப்போது நான் **மலை ஏறுவதில்லை.** ஆனால் மற்ற ஊழியர்களை, டாக்டர்களை அனுப்பி மலை ஊழியத்தை தொடர்ந்து நிறைவேற்றுகிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் !

# கர்த்தர் எண்ணுகிறார் !

*நன்றி :* **சமர்ப்பண்**

(TWR விஷ்வவாணி ஸ்தாபகர் சகோ. **எமில் ஜெபசிங்** அவர்கள் 2004ல் சமர்ப்பண் இதழுக்காக எழுதியது)



ஆதியாகமத்திலே பாவம் செய்கிறவர் நடுவில் தம்மேல் சிநேகம் வைக்கிறவர்களை கர்த்தர் **எண்ணினார்**! நினைத்தார், **எண்ணுதல்** (Count) 50, 45, 40, 30 20,10 என்று மனிதனின் கைநாடியை பிடித்திருப்பவர் மனிதரில் தம்மை **கனம் பண்ணுகிறவர் எத்தனை பேர்** என்று அன்றும் இன்றும் **எண்ணுகிறார் ! (Count)** அவர்களுக்கு வாரத்தில் முதலாம் நாள்முதல் ஏழாம் நாள்வரை நடப்பது எல்லாம் நல்லது என்பதை அறிவதற்கு அவ்வாறு எண்ணுகிறார்!

ஆதியாகமத்தில் **(Count) எண்ணத் துவங்கியவர்** வெளிப்படுத்தின விசேஷம்வரை **எண்ணுகிறார் !**

மனுப்புத்திரர் நடுவில் தம்மை **விசுவாசிக்கிறவர்** யார் **வெறுத்து தள்ளுகிறவர்** யார் என்று எண்ணுகிறார்! **அக்கிரமக்காரர்** யார், **பரிசுத்தமாக நடப்பவர்** யார் என்றும் **அநியாயம்** செய்கிறவர் யார், **நீதி செய்கிறவர்** யார் என்றும் எண்ணுகிறார்!

பரிசுத்த வேதம் முழுவதும் **மனிதர்கள் எண்ணப்படுகிறார்கள்.** எவ்வாறு எண்ணப்படுகிறார்கள் ? **மனம் திரும்ப வாஞ்சையுள்ளவர்கள்** யார்? யார் ? என்று எண்ணப்படுகிறார்கள்.

வாஞ்சையுள்ளவர்களை திருப்திசெய்கிறார். வாஞ்சையற்றவர்களை திகைக்கச் செய்கிறார். மனம் திரும்புகிறவர்களை மறுரூபப்படுத்துகிறார். மனம் மாறாதவர்களை நடுங்கச் செய்கிறார்.

கர்த்தர் **கேட்டு கேட்டு** எண்ணவில்லை. பார்த்து பார்த்து கண்டு **கண்டு** எண்ணுகிறார்.

எத்தனை இரகசிய கேமராக்களை வைத்தாலும் **மனிதனால் நேர்மையாளன்** யார். தீயவன் யார் என்று எண்ணவே முடியாது .

கர்த்தருடைய **கண்களோ** பூமியெங்கும் உலாவுகின்றது ! மனித **சிந்தனைகளை** தூரத்திலிருந்து அறிகின்றது ! மனித **நடைகளை** சீர்தூக்கி பார்க்கின்றது.

**கர்த்தர்** எண்ணுகிறார்! **இருதயங்களை** எண்ணுகிறார்! தம்மை நோக்கி ஏங்கும் இதயங்களை எண்ணுகிறார்! தாயைவிட்டு பிரியும்போது குழந்தை ஏங்குவதுபோன்று தம்மைக்குறித்து ஏங்கும் இதயங்களை எண்ணுகிறார்!

பாவத்திற்காக ஏங்குகிறவர் யார்? பரிசுத்தத்திற்காக ஏங்குகிறவர் யார் ? என்று கர்தத்ர் எண்ணுகிறார் ! ஆயிரம்பேரில் ஒருவராக இருக்கலாம். இலட்சம்பேரில் இருப்பவராகவும் இருக்கலாம் ! அந்த **ஒரு சிலரை** கர்த்தர் எண்ணுகிறார்.

அவர்கள் மூலம் தமது வல்லமையை சக்தியை தெரியப்படுத்தவே எண்ணுகிறார் ! பரலோக ராஜ்ஜித்தின் கூட்டத்தில் பூலோகத்தில் இருக்கும் பொழுதே அவர்களையும் சேர்த்துக்கொள்ளவே எண்ணுகிறார். பூலோகத்தாரிடம் பரலோகம் செய்யப்போவதை அவர்களுடன் கலந்துகொள்ளவே எண்ணுகிறார் !

**ஆபிரகாமுக்கு தெரிவிக்காமல்** சோதேமையும் அதைச் சேர்ந்த பட்டணங்களையும்அழிக்கவே இல்லை! **கர்த்தரால் எண்ணப்படுகிறவர்கள் யார்?** கர்த்தரால் சமூகத்தில் **நிற்கிறவர்கள்** தேவ சமூகத்தைவிட்டு வேறு யாருடைய சமூகத்தையும் தேடாதவர்கள்! **இயேசு எனக்கு போதும்** என்று இன்று வாழ்கிறவர்கள்! மனிதனால் அல்ல **தேவ வசனத்தினால்** வழி நடத்தப்படுகிறவர்களை **முழங்கால்** ஜீவியத்தை வாஞ்ஜீக்கிறவர்களை ஜெபத்திலே உறுதியுள்ளவர்களை எண்ணுகிறார்.

**பேதுருவே** ஒரு மணி நேரம் விழித்திருக்கக் கூடாதா என்று கை கடிகாரத்தைப் பார்த்து அல்ல. நேரங்களை உருவாக்கியவர், காலங்களை அமைத்தவர், **நமது ஜெப நேரங்களை எண்ணுகிறார் !** நீங்கள் **தனி ஜெபம் செய்து** எத்தனை நாளாகிவிட்டது என்பதையம் மணிக்கணக்காக முழங்காலில் நின்ற நீங்கள் இப்பொழுது **ஓரிரு நிமிடங்களே ஜெபத்துக்க கொடுக்கிறீர்கள்** என்று எண்ணுகிறார்!

நீதிமொழிகள் 8:34 கூறுவதுபோன்று என் வாசற்படியில் நித்தமும் விழித்திருந்து என் கதவு நிலை யருகே காத்திருந்து **ஜெபிக்கிறவர்கள் யார்**, என் கதவை தட்டுகிறவர் யார், **விடாமல் தட்டுகிறவர் யார் என்றும் எண்ணுகிறார்,**

தம்மிடம் நன்மைபெற்றவர்களில், திரும்பிவந்துதம்மை ஸ்தோத்தரிக்கிறவர்கள் யார் என்றும் கர்த்தர் எண்ணுகிறார். பத்து குஷ்ட ரோகிகளுக்கும் சுகம்கொடுத்தார். ஆனால் **ஒரே ஒருவன்** மட்டுமே வந்தான் என்றும் **தம்மை துதிக்கும்** உதடுகள் ஒவ்வொன்றையும் கர்த்தர் எண்ணுகிறார், துதிகளின் நடுவில் வாசம் செய்கிறவர் **நன்றியோடு தம்மை துதிக்கிறவர்களை** மேலும் துதிக்கச்செய்ய ஸ்தோத்தரிக்கிறவர்களை மேலும் மேலும் பெற்று தம்மை **ஸ்தோத்தரித்துக்கொண்டே** இருக்க எண்ணுகிறார்.

**தமக்கு கொடுக்கிறவர்களை கர்த்தர் எண்ணுகிறார். எவ்வளவு** கொடுத்தார் **எப்படி கொடுத்தார்** என்று எண்ணுகிறார். **எல்லோரும் கொடுப்பதை** கையேந்தி கர்த்தர் **வாங்குவதே இல்லை, காயீன் கொடுத்ததை ஏற்கவே இல்லை,** ஆபேல் கொடுத்ததை ஏற்றார்.

இஸ்ரவேல் புத்திரர் என்க்குக் காணிக்கையை கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு **மனப்பூர்வமாய்** உற்சாகத்துன் **கொடுப்பவன் எவனோ** அவனிடத்தில் எனக்கு காணிக்கையை வாங்கு என்று யாத்திராகமம் 25:2 கூறினார்.

**காயீனிடம்** மனப்பூர்வம் **இல்லை,** உற்சாகம் இல்லை ! **வற்புறுத்தி வரும் காணிக்கை எது!**

**கேட்டு கேட்டு** ஞாபகப்படுத்தி ஞாபகப்படுத்தி **வரும் காணிக்கை எது** ? **கேட்காமல்** ஞாபகப்படுத்தாமல் **வற்புறுத்துதலே** இல்லாமல் வலியவரும் **காணிக்கை எது என்றே கர்த்தர் எண்ணுகிறார்.**

ஐசுவரியவான்களும் காணிக்கை பேட்டார்கள், அந்த **ஏழை விதவையும்** காணிக்கை போட்டாள் **அவள் எவ்வளவு** போட்டாள், எப்படி பேட்டாள் **என்பதையே இயேசு பார்த்தார்.**

அது **இரண்டு காசுகள்தான்** என்று **காணிக்கை பெட்டியை திறந்து பார்க்காமல்** எண்ணினார் (பரி லூக்கா 21:1-4) தாங்கள் **பாதிக்கப்படாமல்** கொடுப்பது யார், **பாதிக்கப்பட்டு** கொடுப்பவர் யார் என்பதையும் இயேசு எண்ணுகிறார். ஆரவாரத்தோடு கொடுப்பவர் யார். அமைதலாக கொடுப்பது யார் என்பதையே இயேசு எண்ணுகிறார்,

**எவ்வளவு கொடுக்கிறார் என்பதல்ல, எப்படி** கொடுத்தார் என்பதையே எண்ணுகிறார், **யோசித்து** எழுதி **கணக்கு போட்டு** கொடுத்தாரோ அல்லது **அமுக்கி குலுக்கி சரிந்துவிழும்படி கொடுத்தார்களோ** என்றும் கவணிக்கிறார்.

**தம் பின்னே** வருகிறவர்கள் யார், **வர யோசிக்கிறவர்கள்** யார் என்று **கர்த்தராகிய இயேசு எண்ணுகிறார்!** தகப்பனுக்கு செய்யவேண்டிய **கடமைகள்** உண்டு, வீட்டில் **பொறுப்புகள்** உண்டு (பரி, லூக்கா 9:51-61) என்று கூறுவது யார், வலைகளைவிட்டு விட்டு என்னைப் பின்பற்றுவது யார் என்று இயேசு எண்ணுகிறார்,

> எப்போதும் **தம்மோடு இருக்கவும்** எதையும் **தாம் செய்வதைப்போல்** செய்யவும் எங்கும்தாம் **செல்லும்போது** செல்லவும் தயாரானவர் யார். தடுமாறுகிறவர் யார் என்று இயேசு எண்ணுகிறார்.

**சமர்ப்பிக்கிறவர்** யார் **சந்தேகிக்கிறவர்** யார் என்று இயேசு எண்ணுகிறார்.

இயேசுவை பின்பற்றுகிறவர் மனிதரைப்பின்பற்றுகிறவர்கள் பாவத்தின் பிடியில் இருப்.வர்களுக்கு இருளில் பிடியில் இருப்பவர்களுக்கு, மரணத்தின்பிடியில் இருப்பவர்களுக்கு சாத்தானின் பிடியில் இருப்பவர்க்கு அந்த பிடியில் இருந்து வெளிய வர நீ இயேசுவை பிடித்துக்கொள் என்று கூறி உதவி செய்கிறவர்கள் முயற்சித்தும் திமிறியும் திண்டாடியும் **பாவம்,** சோகம் **சாபம்** என்ற வட்டத்தைவிட்டு வெளியேர முடியாதவர்களுக்கு, தவிக்கிறவர்களுக்கு இயேசுவின் சிலுவையை தெரிவிக்கிறவர்கள் ! சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் சமீபமானாலும் தூரமானாலும் இயேசுவிவ் கிருபைகளை அறிவித்து மனிதர்களை நித்திய ஜீவ கரைக்கு சேர்க்கிறவர்கள் !

> அநேகரை நீதிக்கு உட்படுத்த **அவர்கள் பட்ட பாடுகளை எண்ணுகிறார்.** அவர்கள் அனுபவித்த **உபத்திரவங்களை** எண்ணுகிறார், அதற்கு ஏற்ப அவர்களை ஆசீர்வதிக்க **எண்ணுகிறார்.**

**இரவும் பகலும்** நீ அறிந்தாலும் மறந்தாலும் **இயேசு உன்னை எண்ணுகிறார்.** உன் சிந்தனைகளை வாயின் வார்த்தைகளை காலை முதல் மாலை வரை **உன் கால் செல்லும் தடங்களை** உன் கை எழுதும் எழுத்துக்களை **தாளிலோ** ஸ்கீரினிலோ **நீ வாசிக்கும் வார்த்தைகளை** பேசும், **தொடும்** மனிதர்களை **இயேசு எண்ணுகிறார்,**

> **உன் ஜெப நேரங்களை வாசித்த** வேத அதிகாரங்களை **மனனம் செய்த** வசனங்களை எண்ணுகிறார், கொடுக்கும் காணிக்கைகளை அதற்கு நீ எடுக்கும் பிரயசங்களை எண்ணுகிறார் ! அவைகளை குறித்தும் வைக்கிறார்.

அதற்கேற்ற பலன் கொடுக்க **கண்மூடும் நேரத்தில்** அதற்கேற்ற **வரவேற்பும் கொடுத்து** இயேசு நிமிடம் விடாமல் நாள் விடாமல் உலகில் அனைவரையும் எண்ணுகிறார். **மனிதர் எவரும் இயேசுவின் கண்களுக்கு தப்புவதே இல்லை.**

## ஓர் பிரார்த்தனை

**முதலாம்** நாள் **இரண்டாம்** நாள் என்று உலக ஆரம்பத்தில் ஏழு நாட்களையும் எண்ணியவரே **இருவர் மூவர்** முழங்கால் படியிடும் இடங்கள் எது என்று **எண்ணுகிறவரே** ! ஐம்பது, நாற்பது, ஐந்து நாற்பது, முப்பது இருபது, பத்து என்று **கிராமங்களிலும்** பட்டணங்களிலும் **தம்மை விசுவாசிக்கிறவர்** இன்னார் என்று அறிகிறவரே..

**இரண்டு** பேர் படுத்திருப்பார், **ஒருவர்** எடுத்துக்கொள்ளப்படுவார் என்றும் **இருவர்** இயந்திரம் அரைப்பார்கள், **ஒருவர்** எடுத்துக்கொள்ளப்படுவார் என்று **எண்ணப்போகிறவரே** தாலந்தை **இருமடங்காக்கியவர் யார்,** இல்லாமல் போக்கியவர் யார் என்று **எண்ணப் போகிறவரே** தேவரீர்! நீர் எண்ணும் போது **நானும்** என் **வீட்டாரும்** கர்த்தரை சேவிக்கிறவர்களாக, **புத்தியுள்ள கன்னிகைகளாக** செம்மறி ஆடுகளாக **எண்ணப்பட கெஞ்சிகிறோம்,** எங்கள் கெஞ்சுதலை **இயேசுவின் நிமித்தம்** அங்கீகரிக்க வேண்டும் என்று **இயேசுவின் நாமத்திலேயே** கெஞ்சுகிறோம்.

ஆமென்.

## "தீப்பற்றி எரியும் இலங்கை"

தமிழ் இனத்தையே அழிக்க நினைத்த சர்வாதிகாரிகளான **மகிந்த ராஜபக்ச** குடும்பம் அனைத்தையும் சிங்கள மக்களே அவர்களை ஓட ஓட விரட்டி உள்ளார்கள். **மகிந்த ராஜபக்ச** வீடு பற்றி எறிகிறது. அவரின் குடும்பத்தினரின் வீடுகளும் பற்றி எறிகிறது. இலங்கையில் பட்டினி சாவு பெருக தொடங்கிவிட்டது. **தமிழர்களுக்கு செய்த துரோகத்தின் பலனை** இப்போது குடும்பமாய் அனுபவிக்கிறார்கள்.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

இலங்கை தேசத்திற்காகவும் மக்களுக்காகவும் வாசகர்கள் ஜெபிக்க கேட்டுக்கொள்கிறேன்.

# கேள்வி? பதில்!

**கேள்வி :** சகோ. ராபின்சன் என்ற ஊழியர் Onlineல் முழு இரவு ஜெபம் நடத்துகிறதை கண்டேன். நன்றாக நடத்துகிறார். நீங்கள் அதை பார்த்தீர்களா? அவரைப்பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?

**பதில் :** நாலுமாவடி மோகன் சி. லாசரஸ், சகோ. சாம் ஜெபதுரை ஆகியவர்களின் சீசன் என்று கூறலாம். மற்றவர்களின் ஊழியத்தை பின்பற்றி அவர்களின் தவறையும் கைகொள்பவர், இவர் ¼ÃVz D Ö¦ Ø\ _ é V\ ¶ **க்கினி அபிஷேக முகாம்** என்ற பெயரில் கூட்டங்களை நடத்துபவர்.

இவர் ஊழிய ஆரம்பத்தில் சேலத்தில் என் வீட்டில் என்னை சந்தித்தார். முழுநேர ஊழியத்துக்கு தன்னை அற்பனித்திருப்பதாக கூறினார். சில சந்தேகங்களை கேட்க விரும்புவதாக கூறினார். கேளுங்கள் தம்பி என்று கூறிவிட்டு. தம்பி நீங்கள் எப்போது இரட்சிக்கப்பட்டீர்கள் என்று கேட்டுவிட்டு **அன்னிய பாஷை பற்றி** உங்கள் அபிப்ராயம் என்ன ? என்று நான் கேட்டேன். ஏனோ ஒரு சிறிய சிரிப்பு சிரித்துவிட்டு ஏதோ கூற தயங்கி சமாளிக்க நினைத்து சோபாவில் சாய்ந்து கொண்டார். அதிலே அவருக்கு குழப்பம்உண்டு என்று நான் யூகித்தேன். மேலும் அவருடன் வந்தவர் காரணமாகவும் அவருக்கு மரியாதை கொடுக்கும் வகையிலும் அதற்குமேல் அவர் ஒன்றும் பேசவில்லை. அவருடைய ஆரம்ப கால ஊழிய காலத்தில **முதிர்ச்சி அடையாத** நிலையில் அவர் **அன்னிய பாஷை** பற்றி பேச பயந்தார் என்று நினைக்கிறேன்.

பாவம் இவரும் **தவறான அன்னிய பாஷை** உபதேசத்தையே பின்பற்ற ஆரம்பித்துவிட்டார். **அக்கினி அபிஷேக ஸ்பெஷலிஸ்ட்** ஆகிவிட்டார். இந்த பொய்யான, வேதத்துக்கு புறம்பான இந்த உபதேசம் **தம்பி ராபின்சனை** பணக்கார ஊழியர்களில் இவரும் ஒருவராக்கி விட்டது. குறுகிய காலத்தில் **நிலம் வாங்கி** மிகப்பெரிய ஜெப கோபுர **கட்டிடங்களை** கட்டிவிட்டார்.

இவரின் **அக்கினி அபிஷேக** கவர்ச்சியும் **கொரோனா** லாக்டவுன் காரணமாகYoutube வழியாகத்தான் ஆவிக்குரிய செய்திகள் கேட்க முடியும். வெளியில் ஆராதனைக்குகூட போகமுடியாத மக்களுக்கு அந்த சூழ்நிலையில் இவர் நடத்திய உபவாச ஜெப கூட்டங்கள், **முழு இரவு** ஜெப கூட்டங்கள் மக்களுக்கு ஆறுதல் அளித்திருக்கும் மேலும் இவர் மனதில் தோன்றிய தீர்க்கதரிசன ஜெப குறிப்புகளை, ஜெபத்தில அறிவிக்கும்போது மக்களுக்கு ஆறுதலை உண்டாக்கியிருக்கும். இவர் பாடும்போதும், ஜெபிக்கும் போதும் இடை இடையே **ஒரே வார்த்தையில் பேசும்** அன்னிய பாஷை இருக்கிறது, அது கடவுளுக்கும் மக்களுக்கும் புரியாத **அன்னிய பாஷை** வார்த்தைகள், வசனம் புரிந்த உண்மை விசுவாசிகளுக்கு அவர் பேசிய பாஷை பொய் என்று விளங்கும். மொபைலில் அவர் பேசிய **பாஷையை பதிவு செய்து** பாருங்கள், ஒரே வார்த்தையை திரும்ப திரும்ப உச்சரிப்பதை கண்டுபிடிக்கலாம். ஆவியை பகுத்தறியும் கிருபையை நீங்கள் பெற்றிருப்பீர்களேயானால் நான் எழுதுவது உண்மை என்று அறிவீர்கள். அவர் ஊழியத்தில்

ஆத்துமாவுக்கு பிரயோஜனமானவற்றை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள். அவரின் **அக்கினி அபிஷேக அன்னிய பாஷை** அவைகளை நம்பி ஏமாந்து போகாதீர்கள்.



**கேள்வி :** ஆவியின் நிறைவுக்கு அடையாளம் என்ன ?

**பதில் :-** படத்தில் நீங்கள் காணும் மக்கள் தங்கள் **கைகளை உயர்த்தி கைகளை தட்டி ஆர்பரிப்பதை** காண்கிறீர்கள். இது **ஆவியின் நிறைவல்ல,** ஆவியின் **அபிஷேகமும் அல்ல**, ஆவியின் **சந்தோஷத்தின் அடைாளமும்** அல்ல,

அது சரீரத்தில உண்டாகும் **அசைவுகளால்** உண்டாகும் மனத் திருப்தியாகும். அவர்கள் ஆர்பரிக்கும் போது அவர்கள் வாயிலிருந்து வரும் **சப்தத்தை கவனியுங்கள்**. பலர் வெருமனே ஸ்தோத்திரம் ! **ஸ்தோத்திரம் !** என்றும் அல்லேலூயா ! **அல்லேலூயா !** என்றும் கூறி **அழுவதை** கேட்கலாம். பலவித **மன போராட்டத்திலும்** மன வேதனையிலும், **வீட்டுப் பிரச்சனை** கடன் பிரச்னை கணவன் மனைவி **பிரிவினையின் வேதனை** பிள்ளைகளைப்பற்றிய **கவலைகளை** அல்லேலூயா என்ற **பெரும் சப்தத்தில்** தங்கள் பாரங்களை **கரைத்துவிடுகிறார்கள்.** வீட்டில் மனம் விட்டு **அழ முடியாதவர்கள்,** வேறு எங்கும் தங்கள **கவலையை பகிர்ந்துகொள்ள முடியாதவர்கள்** இப்படிப்பட்ட கூட்டங்களில் அல்லது **ஆராதனையில்** கடைசி நேர **ஜெப நேரங்களில்** வாய்விட்டு கதறி **அல்லேலூயா** வார்த்தையை **மிகுந்த சப்தத்தோடு** கூறும் போது **சரீரம் முழுவதிலும்** ஏற்படும் அசைவு எண்ணத்திலும் **அதிர்வலைகளை உண்டாக்கி** ஒரு பெரும் திருப்தியை உண்டாக்கும். இந்த திருப்தி, சமாதானம் **கூட்டம் முடிவு வரை மட்டுமே** இருக்கும். கூட்டத்தை விட்டு அல்லது **ஆராதனையை விட்டு** வீட்டுக்கு வரும் வழியிலேயே அவை அனைத்தும் **காற்றில் கரைந்ததை** போல் மாறும்.

இது **ஆவியின் நிறைவு** அல்ல. **ஆவியின் நிறைவை** சப்தமாக **அல்லேலூயா** கூறுவதிலோ **ஸ்தோத்திரத்தை வேகமாக கூறுவதிலோ கிடைக்கவே கிடைக்காது.** யோ. 14:16, 23,25, எபே. 1:13 ஆகிய வசனங்களில் எழுதியதை போல் **ஆவியானவர்** நமக்குள்ளே வரவேண்டும். நமக்குள்ளே **தங்கவேண்டும்.** அப்போது ஆவியானவர் **தூக்க நேரம்தவிர** எல்லா நேரமும் நம்மில் **நம்மோடு** எப்போதும் இருப்பதை உணரமுடியும். அப்போதுதான் அவர் **ஆறுதல்** அளிப்பதையும், ஆலோசனை கூறுவதையும் அறிய முடியம். தூங்கினாலும் **தூக்கத்தில்** சமாதானம் அருளுவதை உணரலாம். 127ம் சங்கீதத்தில் 3ம் வசனத்தில் **அவர் தமக்கு பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்.** இந்த மொழி பெயர்ப்பு தவறு. ஆங்கிலம் போன்ற மற்ற எல்லா பாஷைகளிலும் பிரியமானவனுக்கு **நித்திரையில்** அளிக்கிறார். அதாவது **நித்திரையில் சமாதானம் அருளுகிறார்** என்று அர்த்தம். ஆகவே **பரவச பேச்சுகளில்** ஆவியானவரின் நிறைவு இருக்காது. **அன்னிய பாஷையிலும் ஆவியானவரின் நிறைவு இருக்காது.** ஒவ்வொரு நிமிஷமும் நம் மனதில் நிலைத்திருக்கும். வேத வசனத்தின் அர்த்தம் விளங்கும்போது ஆவியின் நிறைவை உணருவீர்கள்.

இந்து மதத்தை சார்ந்த தமிழ்நாட்டின்

**மகா கவி பாரதி** அவர்கள்

எழுதியது

ஈசன் வந்து
சிலுவையில் மாண்டான்
எழுந்து உயிர்த்தனன்
நாள் ஒரு மூன்றில்
....(இந்தியாவில்) தேசத்தில் இதன்
உட்பொருள் கேளீர்

தேவன் வந்து
நமக்குள் புகுந்து (வாழ்ந்து)
நம் அகங்கையை கொன்றுவிட்டால்

நாசமின்றி நமை
நித்தமும் காப்பார்.

- மகாகவி பாரதி

Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

Annual Subscription:
India - Rs.60/
Foreign - Rs.600/

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press, 168, Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.

**APRIL - 2022**